ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,126 பங்குனி மாதம்

# "தமிழர்கள் மறுசிந்தனே!"

இரண்டாம் பாகம் (இடைப் பகுதி)



இந்துமதத்தின் தலைமை ஆச்சாறிய குருபீடம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறூர்.

இந்து இலக்கியக் கழக வெளியீடு

**43,73,126ஆம் ஆண்டின் பங்குனி மாத வெளியீடு.**

தலைப்பு: **"தமிழர்கள் மறுசிந்தனை - இரண்டாம் பாகம் (இடைப் பகுதி)"**

# உள்ளுறை

1. **"தமிழர்கள் மறுசிந்தனை"** - இந்துவேதம், இந்துமதம் பிழைக்க, தழைக்க, உழைக்க அழைக்கிறோம் என்று தமிழர்களுக்காக குருதேவர் எழுதிய நெடிய அஞ்சல் வடிவக் கட்டுரையின் இரண்டாம் பாகத்தின் இடைப் பகுதி.
2. **"தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் கருவூரார்"** - குருதேவர் எழுதிய நூலிலிருந்து எடுக்கப்பட்ட சில வரிகள்.

---

# தமிழர்கள் மறுசிந்தனை

## இந்து வேதம்! இந்து மதம்!!
## பிழைக்க! தழைக்க!! உழைக்க!!!
## அழைக்கிறோம்! அழைக்கிறோம்!
## அழைக்கிறோம்!
## வாரீர்! வாரீர்!! வாரீர்!!!

**இந்துமதத் தலைமை ஆச்சாரிய மூலக் குருபீடம்,**
**இந்துமதத் தந்தை, இந்துவேத நாயகம்,**
**ஞானாச்சாரியார்,**
**பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி,**
**குருமகாசன்னிதானம்,**

# ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்

**அருளும்**

# செயல்விளக்கத் திருவோலை (இரண்டாம் பாகம்) தொடர்ச்சி

## 4) நான்மறை, நான்முறை, நானெறி, நான்வேதம் பற்றிய பேருண்மைகள்:

### 4.1. நான்மறை

**4.1.1. நான்மறை** என்பதில் மறை, மறை முறை, மறை நெறி, மறை வேதம் என்ற நான்கு பெரும் பகுப்புக்கள் உண்டு. இந்த நான்கு பகுப்புக்களுக்குமுரிய அருளாற்றலையுடைய மந்திர, மந்திற, மந்தர, மாந்தர, மாந்தரீகங்கள் எனும் ஐந்துக்கும் உரிய **எழுத்துக்கள், சொற்கள், சொற்றொடர்கள், சொற்றொடர்களால் நிறைந்த முழுமையான வாசகங்களின் கருத்துக்கள்** எனும் நான்கு நிலைகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் குறிக்கும் சொல்லாகவே நான்மறை என்னும் சொல் இருக்கிறது.

**4.1.2.** நான்மறை என்ற சொல்லுக்குள் அடங்கக் கூடியவைகள் பாரம்பரிய உரிமையோ அல்லது பயிற்சி முயற்சி தேர்ச்சி முதிர்ச்சிகளால் உரிய பக்குவமோ உடையவர்களைத் தவிர மற்றவர்கள் தெரிந்து

<u>கொள்ளக் கூடாது, கூடாது, கூடாது, கூடவே கூடாது</u> என்று மறைத்துக் காக்கப்படுபவைகள் ஆகும்! என்று மறைத்துக் காக்கப்படுபவைகள் ஆகும்!! என்று மறைத்துக் காக்கப்படுபவைகள் ஆகும்!!!

**4.1.3.** அதாவது இந்த நான்மறை என்ற சொல்லுக்குள் அடங்கக் கூடியவைகள் அனைத்தும் இந்துவேதத்தின் நான்கு பகுதிகளாகிய 108 பூசைமொழி நூல்கள், 48 பூசைவிதி நூல்கள், 96 தத்துவ நூல்கள், 144 செயல் சித்தாந்த நூல்கள் ஆகிய நான்கு வகைக்கும் உரிய வித்துக்கள் (விதைகள்) போன்றவைகளாகும். எனவேதான், **இந்துவேத வித்துக்கள் உரிய பாரம்பரியமோ, பக்குவமோ இல்லாத அன்னியர்களிடமோ அல்லது மாற்றூர்களிடமோ அல்லது வேற்றூர்களிடமோ அல்லது துரோகிகளிடமோ அல்லது விரோதிகளிடமோ கிடைத்து விடக் கூடாது, கிடைத்து விடக் கூடாது, கிடைத்து விடக் கூடாது, கூடாது, கூடாது, கூடாது, கூடவே கூடாது** என்ற முன்னெச்சரிக்கையோடு முழுமையாக மறைத்துக் காக்கப்படுகின்றன! முழுமையாக மறைத்துக் காக்கப் படுகின்றன!! முழுமையாக மறைத்துக் காக்கப்படுகின்றன!!!

**4.1.4.** இப்படி இந்த நான்மறை என்ற சொல்லுக்குள் அடங்குபவைகள் அனைத்தும் முழுமையாக மறைத்துக் காக்கப்பட்டு வருவதால்தான் கடந்த நான்கு யுகங்களாக இந்துமதத்தின் தலைமை ஆச்சாரியாரான குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூறூர் எனப்படும் ஒரே ஒரு பாரம்பரியத்தின் நேரடித் தலைமையின் கீழேயே **இந்துமதத்தின் எண்வகை மூல ஆச்சாரியார்கள்** 1) 48 ஈசுவராச்சாரியார்கள், 2) 48 ஆதி ஈசுவராச்சாரியார்கள், 3) 48 பரமாச்சாரியார்கள், 4) 48 ஆதி பரமாச்சாரியார்கள், 5) 48 சிவாச்சாரியார்கள், 6) 48 ஆதி சிவாச்சாரியார்கள், 7) 40 சங்கராச்சாரியார்கள், 8) 32 ஆதி சங்கராச்சாரியார்கள் முதலியோர் அனைவரும் தங்களுடைய போதனைகளையும், சாதனைகளையும் முறையாகவும், நிறைவாகவும்,

முழுமையாகவும் செய்திட முடிந்தது, செய்திட முடிந்தது, செய்திட முடிந்தது.

இன்னும் சொல்லப் போனால், அருட்பட்டங்களால் தயாராகக் கூடிய 48 வகைப்பட்ட ஆச்சாரியார்கள், சித்திகளின் மூலம் தயாராகக் கூடிய 13 வகை ஆச்சாரியார்கள் *(இவர்கள் 14 வகைப்பட்ட ஆச்சாரியார்கள் என்று குறிக்கப்படும் பாடவேறுபாடு உண்டு);* ஆறு சமயத்தார்கள் எனப்படும் 'ஆறுசமய மூலவர்களான' 1. அருளாளர்கள், 2. அருளாளிகள், 3. அருளாடு நாயகங்கள், 4. மருளாளர்கள், 5. மருளாளிகள், 6. மருளாடு நாயகங்கள்; 48 வகைப்பட்ட சித்தர்கள்; 48 வகைப்பட்ட கடவுள்கள்; 48 வகைப்பட்ட வழிபடு நிலையினர்கள்;... முதலியோர் அனைவருமே இந்துவேதம், இந்துவேத மதமான இந்துமதம் எனப்படும் கனிமலர்ச் சோலைகளிலே தொடர்ந்து பூத்துக் குலுங்கக் கூடிய பூக்களாகவும், காய்த்துக் கனிந்து குலுங்கக் கூடிய கனிகளாகவும் தொடர்ந்து விளைய முடிகின்றது! விளைய முடிகின்றது!! விளைய முடிகின்றது!!! ... தோன்ற முடிகிறது! தோன்ற முடிகிறது!! தோன்ற முடிகிறது!!! ... தோன்றிச் செயல்பட்டு அருளுலகம் நிலையான வளவளர்ச்சியையும்; வலிமைச் செழிச்சியையும், ஆட்சி மாட்சியையும் பெற்றுத் திகழ முடிகிறது! பெற்றுத் திகழ முடிகிறது!! பெற்றுத் திகழ முடிகிறது!!!

## <u>4.2. நான்முறை</u>:-

**4.2.1.** நான்முறை என்பது; **'மக்களின் வாழ்வியல் முறைகளை, நான்கு பெரும் பிரிவுகளாகப் பகுத்து அவற்றிற்கு உரிய செயல்நிலைகளை அல்லது செயல்வழிகளை மிகமிகத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் வரையறுத்துக் கூறுவதாகும்'**.

**4.2.2.** மக்களின் வாழ்வியல்கள் 1. தனிமனித வாழ்வியல் முறை, 2. குடும்ப வாழ்வியல் முறை, 3. சமுதாய வாழ்வியல் முறை,

4. அரசியல் வாழ்வியல் முறை என்று நான்கு பெரும் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டே நான்முறை என்று இந்துவேதத்தால் வழங்கப்படுகிறது.

**4.2.3.** மேற்படி நான்கு வகைப்பட்ட வாழ்வியல் நெறிகளையும் நிலையாக ஏட்டறிவு, பட்டறிவு, செவிவழிச் செய்தி அறிவு, அருளுணர்வு எனும் நான்கு வகைகளில் தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்திடும் வல்லவர்களே **'நான்முறை முற்றிய ஆசான்கள்'** என்று குறிக்கப்படுகிறார்கள்.

**4.2.4.** இந்த ஆசான்களிலும் குரு, குருமார், குருக்கல், பூசாறி என்ற நான்கு வகையினர் பிரித்துக் காட்டப்படுகிறார்கள்.

**குறிப்பு:-** இந்த நால்வரின் நிலைகள், செயல் நிலைகள், பொறுப்புகள், உரிமைகள், ... முதலியவைகள் எல்லாம் மிக நுட்பமாக விளக்கப் படுகின்றன. இவை பற்றிப் பலரும் அறியும் வண்ணம் பொது இடங்களில் கூறுவதோ, ஏடுகளில் எழுதி எல்லோருக்கும் வழங்குவதோ கூடாது! என்று தடை விதிக்கப்பட்டிருப்பதாலும், இவற்றை இந்து வேதத்தை பயிலக் கூடிய மாணாக்கரின் பக்குவம் அறிந்துதான் கூற வேண்டும் என்ற பரிந்துரைக் குறிப்பு இருப்பதாலும், இவை பற்றி மேற்கொண்டு எதுவும் கூறாமல் இந்த அளவில் நிறைவு செய்யப்படுகிறது.

## 4.3. நானெறி:-

**4.3.1.** இந்த நானெறிக்குள் அடங்குவன:-

1) நால்வகைப் பயிற்சி நிலைகள், 2) நால்வகை முயற்சி நிலைகள், 3) நால்வகைத் தேர்ச்சி நிலைகள், 4) நால்வகை முதிர்ச்சி நிலைகள்;

1) நால்வகைப் பத்தி நிலைகள், 2) நால்வகைச் சத்தி நிலைகள், 3) நால்வகைச் சித்தி நிலைகள், 4) நால்வகை முத்தி நிலைகள்;

1) நால்வகை நோக்குகள், 2) நால்வகைப் போக்குகள், 3) நால்வகை ஒழுக்கம், 4) நால்வகை ஒழுகலாறுகள்

என்று வகைவகையாகப் பட்டியலிட்டுக் காட்டப்படுகின்றன.

**4.3.2.** இந்த 'நானெறி' எனும் சொல் குறிக்கும் நான்வகைப்பட்ட நெறிகளையும் குறிக்கும் சொற்கள் மிகமிக அழகிய, இனிய, பொருளாழமிக்க பல பட்டியல்களில் இந்து வேதத்தில் வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் மூன்று பட்டியல்கள் மேலே தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. இவற்றின் மூலம்தான் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியான அருளாட்சி நாயகம், ஞானாச்சாரியார், இந்துமதத் தந்தை, இந்துவேத நாயகம், இந்துவேத பீடம், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்: (இந்துமத ஆண்டு 43,71,001 முதல் 43,71,252 முடிய; கி.மு.100 முதல் கி.பி.150 முடிய; கலியுகம் 3001 முதல் 3252 முடிய வாழ்ந்தவர்) "<u>இந்துமதம் வேறு - ஹிந்துமதம் வேறு</u> என்ற பேருண்மையினை விளக்கும்போது; 'நானெறி' என்ற சொல்லுக்கு விளக்கமாக மூன்று பட்டியல்களை எடுத்துக் கூறுவதன் மூலம் விளக்கிக் காட்டி மெய்ப்பிக்கிறோம்" என்று குருபாரம்பரியத்திலும், அவரது 'இந்துமத - ஹிந்துமத குறிப்பேடு' என்ற நூல்களிலும், மற்ற நூல்களிலும் எழுதியிருக்கிறார் என்பதிலிருந்து இந்த மூன்று பட்டியல்களும் எந்த அளவு முதன்மையானவை, சிறப்பானவை, மிகச் சிறந்த சான்றானவை, ஊன்றானவை என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

மேலும், இவரே, தமது நூல்களில்; "... நானெறிக்குட்பட்டவை என்றுள்ள இந்துவேத பட்டியல்களிலிருந்து மூன்றே மூன்று பட்டியல்களை மட்டும் எடுத்துக் காட்டுவதன் மூலம் 'இந்துவேதம் முதன்முதல் தமிழ்மொழியில்தான் வெளியிடப்பட்டது'; 'இந்துவேதம் முதன்முதலில் தமிழ்மொழியில்தான் எழுதப்பட்டது'; 'இந்துவேதம்

முதன்முதல் தமிழ்மொழியில்தான் அருளப்பட்டது'; 'அண்ட-பேரண்டமாளும் பதினெண்சித்தர்கள் தங்களுடைய தாய்மொழியான அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் இந்துவேதத்தை இம்மண்ணுலகுக்கு வழங்கினார்கள், வழங்கினார்கள், வழங்கினார்கள்'... என்ற பேருண்மை நிலைநாட்டப்படுகிறது, நிலைநாட்டப்படுகிறது, நிலைநாட்டப்படுகிறது" என்று அழுத்தந் திருத்தமாக, ஆணித்தரமாக வலியுறுத்திக் கூறுகிறார்.

இக்கருத்துக்களை பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதியான தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய இந்துமதத் தந்தை, அருளாட்சி நாயகம், ஞானவேந்தர், குவலய குருபீடம், இந்துவேத நாயகம், இந்துவேத பீடம், ஞானாச்சாரியார், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் பிறமவேதத்தின் முகப்பிலும் (ஆரம்பத்திலும்), முடிவிலும் அப்படியே எடுத்து எழுதியிருக்கின்றார் என்பதை இங்கு குறிக்கிறோம்.

ஏனென்றால், **'இந்துவேதத்தில் நான்மறை, நான்முறை, நானெறி, நான்வேதம் என்று பதினாறு வகைப்பட்ட நூல்கள் இருக்கின்றன'** என்று இன்றைக்கு இந்துமதத் தந்தையாக, இந்துவேத நாயகமாக, இந்துவேத பீடமாக, இந்துவேதத்தைத் தோற்றுவித்த பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதியாக, இந்துமதத்தின் தலைமை ஆச்சாரியாரான ஞானாச்சாரியாராக வாழ்ந்து வரும் குருமகா சன்னிதானம் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூராராகிய யாம், கடந்த நாற்பது (40) ஆண்டுக் காலமாகக் கூறிட்ட போது; பலர் இந்தச் சொற்கள் எல்லாம் (நான்மறை, நான்முறை, நானெறி, நான்வேதம்) வெறும் சொல் விளையாடல்களே அன்றி பொருளுடையவை அல்ல என்று விமர்சனம் செய்திட்டார்கள்**. அதற்கு யாம், **"எம்மால் இந்துவேதம் வெளியிடப்படும் போது இதற்குரிய பதில் உங்களுக்குக் கிடைக்கும்"**

என்று கூறினோம். அந்தப் பதிலே இந்த நானெறி விளக்கத்தில் இந்த இடத்தில் வருகிறது.

**4.3.3.** "இன்று கலியுகம் 5092ஆம் ஆண்டு நடந்து கொண்டிருக்கிறது. கிறித்தவ ஆண்டுக் கணக்குப்படி இன்றைக்கு 1991ஆம் ஆண்டு நடந்து கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் கடந்த நான்கு யுகங்களாக இருந்து வரும் இந்து ஆண்டு (இந்துமத ஆண்டு) வழங்கும் காலக் கணக்கையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டியிருக்கிறது. ஏனென்றால், இந்த இந்துமத ஆண்டுக் கணக்குத்தான் இம்மண்ணுலகில் தோன்றியுள்ள மதங்களிலேயே இந்துமதம் ஒன்றுதான் மிகமிகப் பழமையானது; தொன்மையானது; மூத்தது, முதலாவதாகத் தோன்றியது; என்றென்றும் நிலைத்து நின்றிடும் பேருண்மைகளையும், பேராற்றலையும் உடையது... என்பனவற்றைச் சான்றும் ஊன்றும் காட்டி விளக்குகிறது.

அதாவது, இந்துமத ஆண்டுக் கணக்குப்படி இந்தக் கலியுகம் 5092 என்ற இந்தக் காலக் கணக்கும்; கி.பி. 1991 என்ற காலக் கணக்கும், இந்துமத ஆண்டிற்கு 43,73,092ஆம் ஆண்டுகள் ஆகும். இவ்வளவு பெரிய, நெடிய, பழம்பெரும் ஆண்டுக் கணக்கைக் காத்து வரும் பெருமை இந்துமதத்திற்குத்தான் இருக்கின்றது. இந்தப் பெருமையினை ஒவ்வோர் இந்துவும் முறையாகத் தெரிந்து, முழுமையாகப் புரிந்து செயல்படத் தொடங்கி விட்டாலே போதும்; இந்துமதம் வளவளர்ச்சி பெற ஆரம்பித்து விடும்! வலிமைச் செழிச்சி பெற்று விடும்!, வாழ்வியல் நடைமுறைகளில் எழிச்சி பெற்று விடும்!, ஆட்சி நிலைகளில் மீட்சி பெற்று விடும்!, ... அவற்றால் இந்துமதமும், இந்துமதத்தின் வேதமும் மறுமலர்ச்சி பெற்றிட முடியும், மறுமலர்ச்சி பெற்றிட முடியும், மறுமலர்ச்சி பெற்றிட முடியும் ..." என்பதுதான் அண்மையில் இந்த கி.பி.1991ஆம் ஆண்டு, இந்தக் கலியுகம் 5092ஆம் ஆண்டு, இந்த இந்துமத ஆண்டு 43,73,092ஆம் ஆண்டு (செப்டம்பர் மாதம் 28, 29) புரட்டாசித் திங்கள் 12, 13 தேதிகளில்

சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் ஆயிரமாண்டு இடைவெளிக்குப் பிறகு நடந்த இந்துவேத மாநாட்டில் இன்றைக்கு இந்துவேதத்தின் தலைமை ஆச்சாரிய மடமான பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதியாகவும், இந்துமதத்தின் தலைமைக் குருபீடமான பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதியாகவும், இந்துவேதத்துக்கும், இந்துமதத்துக்கும் முழுமுதற் குருதேவரான ஞானாச்சாரியாராகவும், இந்துவேத நாயகமாகவும், இந்துவேத பீடமாகவும், இந்துமதத் தந்தையாகவும் பொறுப்பிலிருக்கும் பாரம்பரியமாக அருளாட்சிப் பணிகளை ஆற்றும் குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூராகிய யாம்; இந்துக்களுக்கு, இந்துவேத மக்களுக்கு, இந்து வேதமதமான இந்துமத மக்களுக்கு வழங்கியுள்ள செய்தியாகும், வழங்கியுள்ள செய்தியாகும், வழங்கியுள்ள செய்தியாகும்.

இச்செய்தியினைத் தெரிந்து கொள்பவர்கள் ஒவ்வொருவரும், இச்செய்தியின் பொருளாழத்தையும், இச்செய்தி குறிப்பாகக் குறிக்கும் கருத்துக்களையும், இச்செய்தி நுட்பமாக அறிவிக்கின்ற செயல் திட்டத்தையும் நன்கு ஆராய்ந்து அறிந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து, நம்பிச் செயல்பட வேண்டும், உணர்ந்து நம்பிச் செயல்பட வேண்டும், உணர்ந்து நம்பிச் செயல்பட வேண்டும். அதற்காகத்தான் **‘இந்துவேதமும், இந்துமதமும் பிழைக்க தழைக்க உழைக்க அழைக்கிறோம்’** என்ற தலைப்பிட்டு இந்நூல் எழுதப்படுகிறது.

இப்பொழுது பல துறையினரை மறுசிந்தனை செய்யும்படி கட்டுரைகள் எழுதப்பட்டு வருகின்றன. அவற்றுள், ‘வள்ளலார் மறுசிந்தனை’, ‘திருமடத்தார்கள் மறுசிந்தனை’, ‘சமுதாயச் சீர்திருத்தவாதிகள் மறுசிந்தனை’, ‘தமிழிலக்கியவாதிகள் மறுசிந்தனை’, ‘தமிழாசிரியர்கள் மறுசிந்தனை’, ‘தமிழ் பட்டிமன்றப் பேச்சாளர்கள் மறுசிந்தனை’, ‘தமிழ் புராணச் சொற்பொழிவாளர்கள் மறுசிந்தனை’, ‘தமிழ் எழுத்தாளர்கள் மறுசிந்தனை’, ‘தமிழ் நாளேட்டாளர்கள் மறுசிந்தனை’, ‘தமிழ் வாரப் புத்தகத்தார்கள்

மறுசிந்தனை', 'தமிழ்நூல் பதிப்பகத்தார்கள் மறுசிந்தனை', 'தமிழ்ப் புத்தக விற்பனையாளர் மறுசிந்தனை', 'தமிழ் அரசியல்வாதிகள் மறுசிந்தனை', 'தமிழ்ப் பகுத்தறிவாளர்கள் மறுசிந்தனை', 'தமிழ் நாத்திகர்கள் மறுசிந்தனை', 'தமிழ் ஆத்திகர்கள் மறுசிந்தனை', 'தமிழ் முதியோர்கள் மறுசிந்தனை', 'தமிழ் நடுத்தர வயதினர் மறுசிந்தனை', 'தமிழ் இளைஞர்கள் மறுசிந்தனை', 'தமிழ்ப் பெண்கள் மறுசிந்தனை', 'தமிழ் மகளிர்கள் மறுசிந்தனை', 'தமிழ் மாணுக்கர்கள் மறுசிந்தனை', 'தமிழ் மாணுக்கியர்கள் மறுசிந்தனை' (தமிழ் மாணவியர்கள் மறுசிந்தனை) ... முதலிய எண்ணற்ற தலைப்புக்களில் இந்த இருபதாம் நூற்ருண்டில் தமிழகத்துக்குள் பிறக்க வேண்டிய மறுசிந்தனைகள் பற்றி ஆய்வுக் கட்டுரைகள் எழுதப்பட்டும், தொடர்ந்து சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டும் வருகின்றன, ஞாஞச்சாரியாரான எம்மால்.

இருந்தும் தமிழர்கள் சிந்தனை செய்யவோ, எதையும் மறுசிந்தனை செய்யவோ இன்னும் தயாராகவில்லை, தயாராகவில்லை, தயாராகவில்லை, தயாராகவேயில்லை. எனவேதான், இந்துவேத மதமான இந்துமதத்தின் மக்களாகிய இந்துக்கள் தங்களுடைய எல்லாவகைப்பட்ட நலிவு, மெலிவு, தேக்கம், முடக்கம், ஒடுக்கம், தேய்வு, தொய்வு, ... முதலிய நிலைகளிலிருந்து விடுதலை பெறுவதற்காக இந்துமத மூலவர்களாகவும், காவலர்களாகவும், நாயகர்களாகவும், வாரிசுகளாகவும் இருக்கின்ற தமிழர்கள் என்னென்ன செய்ய வேண்டும்?; எதையெதை எப்படிச் செய்ய வேண்டும்? என்று விளக்கிடும் இந்த அஞ்சல் வடிவக் கட்டுரை நூலுக்கு **'தமிழர்கள் மறுசிந்தனை'** என்ற தலைப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

**4.3.4.** "இந்த **நானெறி** என்ற சொல்லுக்குள் அடங்குவனதான்; 'இந்துமதம் தமிழர்களுடைய சொத்து', 'தமிழர்களே இந்துமதத்தின் வித்து', 'தமிழ்மொழியே இந்துமதத்தின் அருளாட்சிமொழி', 'தமிழ்மொழியில்தான் இந்துமதத்தின் எல்லாவகைப்பட்ட நூல்களும்

இருக்கின்றன', 'தமிழ்மொழியின் மூலம்தான் இந்துமத வாழ்க்கையைப் புரிந்து கொள்ள முடியும்', 'தமிழ்மொழியின் மூலம்தான் இந்துமதக் கடவுள்களோடு முழுமையாகத் தொடர்பு கொள்ள முடியும்', 'தமிழ்மொழியின் மூலம்தான் இந்துமதத்தின் அருள்நிலைகளை அறிய முடியும்', ... என்ற பேருண்மைகளைத் தெளிவாக்கிடும் கருத்து விளக்கச் சொற்றொடர்கள். எனவேதான், இந்த நாநெறி என்ற தலைப்பின் கீழ் இந்துவேதத்திலுள்ள செய்திகளை கூடுமானவரை எல்லோரிடமும் எடுத்துக் கூறிடும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன." என்று பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞானாச்சாரியார், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் பிறமதேவன் எழுதிக் கொடுத்த இந்துவேத நூலில் நாநெறி பட்டியல் பகுதியில் எழுதியிருக்கின்றார் என்பதை இங்குக் குறிப்பிட்டுவிட்டு; நாநெறி பற்றிய ஒரு சில நுட்பமான செய்திகளை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

**4.3.5.** நாநெறி என்பது மக்களில் அறவி, உறவி, துறவி, மறவி என்று நான்கு வகையான அருள்வாழ்க்கை வாழுபவர்கள் உண்டு என்ற பேருண்மையை விளக்குகிறது. இந்த நான்கு வகையினரும்தான் நாட்டு வழக்கில் நாலும் தெரிந்த நாலுபேர் என்று குறிக்கப்படுகின்றனர்.

**4.3.6. அறவி** என்பவர் தன்னுடைய பெற்றோர், உடன் பிறந்தார், மனைவி, மக்கள் என்ற நான்கு சுவர்களை உடைய அறைக்குள் மட்டுமே வாழுபவர்களைப் போன்றவர்கள். அதாவது, இவர்களுடைய அருள் வாழ்க்கை முழுக்க முழுக்க இந்த நான்கு பேர்களுடைய நலத்தை மட்டுமே முழுக்க அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும்.

**4.3.7. உறவி** என்பவர் தான், தனது குடும்பம், தனது தந்தை வழி உறவினர், தாய்வழி உறவினர், தன்னுடைய மனைவியின் தாய்வழி உறவினர் (மாமியார்), மனைவியின் தந்தை வழி உறவினர் (மாமனார்) என்று ஒரு குறுகிய எல்லையை உருவாக்கிக் கொண்டு

வாழ்பவர்கள். அதாவது இவர்களுடைய அருளுலக வாழ்க்கை தாய் வழிச் சொந்தம், தந்தை வழிச் சொந்தம், மாமியார் வழிச் சொந்தம், மாமனார் வழிச் சொந்தம் என்கின்ற நான்கு சுற்றுமதில்களை உடைய ஒரு பெரிய மாளிகைக்குள் வாழும் வாழ்க்கையே ஆகும்.

**4.3.8. <u>துறவி</u>** என்பவர் தன்னுடைய தாய்நாடு, தாய்மொழி, தனது இனம், தனது மதம் என்ற ஒரு விரிந்த எல்லையை உருவாக்கிக் கொண்டு வாழ்பவர்கள். அதாவது, இவர்களுடைய வாழ்க்கை நான்கு பெரிய மதில்களை உடைய ஒரு பெரிய மாநகரத்துக்குள் அல்லது ஒரு பெரிய நாட்டின் தலைநகருக்குள் வாழுகின்ற வாழ்க்கையே ஆகும்.

**4.3.9. <u>மறவி</u>** என்பவர் எல்லையே இல்லாமல் விரிந்து பரந்து கிடக்கும் கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என்ற நான்கு திசையை எல்லையாகக் கொண்டு வாழ்பவர்கள். இவர்களுடைய அருளுலக வாழ்க்கை எங்குச் சென்றாலும் இவர்களைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் விரிந்து பரந்து தொடர்ந்து எல்லையற்றுக் கிடக்கின்ற நான்கு திசைகளையே தங்களுடைய எல்லையாகக் கொண்டு வாழும் மிகப் பெரிய வாழ்க்கையாகும்.

## <u>4.4. நான்வேதம்</u>

இந்த நான்வேதம் என்ற தலைப்பின் கீழ் அடங்குவன இருடிவேதம், அசுரவேதம், யாமவேதம், அதர்வான வேதம்.

**4.4.1.** இந்த நான்கு வேதங்களின் பெயர்களை ஒட்டியே பிறமண்ணினரான பிராமணர்கள் தங்களுடைய ரிக், யஜுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களையும் உருவாக்கினார்கள். அதாவது, **இந்தப் பிறமண்ணினரான பிராமணர்கள் தாங்கள் புதிதாக உருவாக்கும் ஹிந்துமதத்தை இந்தியாவின் மக்கள் தங்களுடைய இந்துமதம்தான் என்று மயங்கி ஏற்றுக் கொள்ளும் வண்ணம்**;

இந்துமதத்திலுள்ள நான்கு வேதங்களைப் போலவே நான்கு வேதங்களை உருவாக்கினார்கள்.

**4.4.2. பதினெண்சித்தர்களின் இந்துமதத்திற்குரிய இந்திய மக்கள்; பிறமண்ணினரான பிருமணர்கள் புதிதாக உருவாக்கிய ஹிந்து மதத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட *ரிக் வேதத்தை* இந்து மதத்தின் இருடி வேதமாகவும், *யஜுர் வேதத்தை* இந்து மதத்தின் அசுர வேதமாகவும், *சாம வேதத்தை* இந்து மதத்தின் யாம வேதமாகவும், *அதர்வண வேதத்தை* இந்து மதத்தின் அதர்வான வேதமாகவும் தவறுதலாக எண்ணி, மயங்கி, ஏமாந்து ஏற்றுக் கொண்டிட்டார்கள்.**

**4.4.3.** இப்படி, பதினெண்சித்தர்களின் இந்துவேத மதமான இந்துமதத்தின் மக்களான இந்துக்கள், தங்களுடைய தாய்மொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் பதினெண்-சித்தர்களால் வழங்கப்பட்டிட்ட நான்கு வேதங்களைப் போல் பெயர்களை உடைய பிறமண்ணினரான பிருமணர்களுடைய சமசுக்கிருத மொழியில் தோற்றுவிக்கப்பட்ட ஹிந்துமத வேதங்களைத் தங்களுடையதாகவே தவறுதலாக நம்பி ஏமாந்து மயங்கி ஏற்றனர்.

அதன் விளைவாகத்தான் 'தமிழர்களுடைய அருளுலக வாழ்வு இருளடைய நேரிட்டது'; 'தமிழர்களுடைய அருளுலக ஆட்சிநிலை வீழ்ச்சியுற்றது'; 'தமிழர்களுடைய அருளுலக உயர்ச்சி தாழ்ச்சியுற்றது'; 'தமிழர்களுடைய அருளுலக வளம் வற்றி வறண்டு வறுமையுற்றது'; 'தமிழர்களுடைய அருளுலக வலிமை நலிந்து மெலிந்து நோயுற்று அடிமைப்பட்டது'; 'தமிழர்கள் தங்களுடைய அருளுலக வரலாறுகளை மறக்க நேரிட்டது'; 'தமிழர்கள் தங்கள் அருளுலகப் பாரம்பரியங்களைத் துறக்க நேரிட்டது', 'தமிழர்கள் தங்கள் உரிமைகளையெல்லாம் அடுத்தவர்களுக்கு விட்டுக் கொடுக்கவும், அடுத்தவர்களிடம் அடகு வைக்கவும், அடுத்தவர்களிடம் விலைக்கு விற்கவும் நேரிட்டது'; 'தமிழர்கள் தாங்களே, தங்களுடைய அருளுலகப் பெருமைகளையெல்லாம்

கட்டுக்கதை என்றும், தவறான கற்பனையென்றும், மூடநம்பிக்கையென்றும், கண்மூடிப் போக்கு என்றும், மடமை என்றும், காட்டுமிராண்டித்தனம் என்றும் விளையாட்டுத் தனமாக விமர்சித்து வீணடிக்க நேரிட்டது'; 'தமிழர்கள் அருளுலகில் தங்களுடைய முன்னோர்கள் பெற்ற வெற்றி வாகைகளையெல்லாம் நம்ப முடியாத நகைப்புக்குரிய புராணச் செய்திகள் என்று நகைத்துப் பகைத்துச் சிதைத்துச் சீரழிக்க நேரிட்டது'; 'தமிழர்களுடைய அருளுலக வீழ்ச்சியும், தாழ்ச்சியும் தமிழர்களின் பொருளுலக வாழ்வில் காலிநிலைகளையும், கூலிநிலைகளையும், போலி நிலைகளையும் உருவாக்கி விட்டது'; 'தமிழர்கள் அருளுலகில் தன்னம்பிக்கையையும், தன்னுரிமையையும், தன்மானத்தையும், தனித் தன்மையையும், தன்னிகரில்லாப் பெருமையையும், ... இழந்ததால் அன்னியர்களிடம் கைகட்டிச் சேவகம் செய்யும் கங்காணிகளாகவும், அடிமைகளாகவும், எடுபிடிகளாகவும் மாறிட நேரிட்டது;' ...

எனவேதான், ஆதிசிவனாரையே அழைத்துத் தன் காலத்திய இந்துக்களை, தன் காலத்திய இந்து மக்களை, தன் காலத்திய இந்துவேத வித்துக்களான தமிழர்களை; தன் காலத்திய இந்துமதத்தின் மூலவர்களான, காவலர்களான, நாயகர்களான தமிழர்களை; மீண்டும் எல்லாவகையான ஆட்சிமீட்சி நிலைகளையும் பெறச் செய்வதற்காக இந்துவேதத்தை தன் காலத்திற்கேற்ப சுருங்கிய அளவில் புதுப்பித்து எழுதித் தரும்படிச் சொன்னார் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியான ஞானாச்சாரியார், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார். **அவர்தான் இந்தக் கலியுகத்தில், முதல் மூன்று யுகங்களிலும் இல்லாத அளவு சிதைந்து, சீரழிந்து, நல வளம் குன்றிட்ட இந்துமதத்தைக் காத்திடும் பணியில் ஈடுபட்டிட்ட அல்லது காத்திடத் தோன்றிட்ட முதல் ஞானாச்சாரியார்** ஆவார். எனவேதான், இந்த 'நான்வேதம்' என்ற தலைப்பில் ஏராளமான செய்திகளைத் தருகின்றார் இவர்.

**4.4.4.** இப்படி, கலியுகம் பிறந்து முதலில் தோன்றிய ஞானச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள், முந்தைய மூன்று யுகங்களிலும் வாழ்ந்திட்ட ஒன்பது பதினெண்சித்தர் பீடாதிபதிகளும் இந்துமதத்துக்கு ஆற்றிய தொண்டுகளையெல்லாம் ஆழ்ந்து ஊன்றிப் படித்தறிந்திட்டார். அவர்களுக்கெல்லாம் இந்துமதம் போன்று புதியதொரு ஹிந்துமதம் தோற்றுவிக்கப்பட்டு; இரண்டுக்குமிடையில் உள்ள வேறுபாடுகளை மக்களுக்கு விளக்கி எடுத்துரைத்து பதினெண்சித்தர்களின் மெய்யான இந்துமதத்தை பாதுகாக்க வேண்டிய நுட்பமான தொண்டு அல்லது பணி ஏற்படவில்லை என்பதை அறிந்துணர்ந்தார்.

எனவேதான், இம்மண்ணுலகுக்கு முதன்முதல் கடலுள் மறைந்த தென் இமயமலையிலிருந்து தோன்றிட்ட தென் பிறமபுத்தரன், தென் கங்கை, தென் யமுனை, தென் இந்து, ... முதலிய பல ஆறுகள் வளங் கொழிக்கச் செய்த அருட்பா நகர், மோகம்சிதரு நகர் எனும் நகரங்களில் இந்து வேதத்தையும், இந்துவேத மதமான இந்து மதத்தையும் முத்தமிழ்ச் சங்கம் அமைத்து இம்மண்ணுலகுக்கு அறிமுகப்படுத்திய பதினெண்-சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும் அடைந்திடாத சிக்கல்களையும், சிரமங்களையும், தொல்லைகளையும் விட அதிகமான சிக்கல்களையும், சிரமங்களையும், தொல்லைகளையும் அடைந்திட்டார் இந்தப் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியான ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்.

அதைப்பற்றி அவர், "இந்தக் கலியுகத்தில் கலியுகம் பிறந்து 1359 ஆண்டுகள் கழித்து இந்த இந்துமத இந்தியாவிற்குள் வந்திட்ட **பிறமண்ணினரான பிருமணர்கள் நன்கு திட்டமிட்டு, நுட்பதிட்பமாகத் தங்களுடைய வேதமதத்தோடு பதினெண்சித்தர்களின் இந்துமதத்திலிருந்து தேவையான ஒரு சில செய்திகளையும், செயல்நிலைகளையும், பல சொற்களையும், பல நூல்களின் அமைப்புக்களையும் மேம்போக்காகத்**

**தேர்ந்தெடுத்துக் கலந்து உருவாக்கிய ஹிந்துமதம் எனும் புதிய மதம் பெயரளவிலும், அமைப்பிலும், நடைமுறையிலும், நூல்களின் பெயர்களிலும், கடவுள்களின் பெயர்களிலும், ... ஏறத்தாழ பதினெண்சித்தர்களின் இந்துமதத்தையே ஒத்திருந்ததால்**; மிக எளிதாக பதினெண்சித்தர்களின் இந்துமதம் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது.

அதனுல்தான், இந்தப் பிறமண்ணினரான பிருமணர்கள் பதினெண்சித்தர்களுடைய இந்துமத நிறுவன நிர்வாகத்திற்குள் மிகமிக நுட்பமாகவும், திட்பமாகவும், முழுமையாகவும் ஊடுருவி எல்லாவகைப்பட்ட நிலைகளையும், செயல்களையும், அதிகாரங்களையும், உரிமைகளையும், பெருமைகளையும் கைப்பற்றி; என்றென்றைக்கும் பதினெண்சித்தர்களுடைய இந்துமதத்தின் பயன்மிக்க தத்துவங்களும், செயல்சித்தாந்தங்களும் அருளாற்றல் மிக்க பூசைமொழிகளும், பூசைவிதிகளும், சடங்குகளும், பழக்கவழக்கங்களும், கலைகளும்; முறையான வரலாறுகளும்; நிறைவான அருளாளர்களின் போதனைகளும், சாதனைகளும்; பொருளாழமிக்க இந்துவேத இந்துமத இலக்கியங்களும் மறுவாழ்வு பெற முடியாதபடிச் செய்துவிட்டார்கள்.

இன்னும் சொல்லப்போனுல், கண்ணை விழித்திருக்கும் போதே விழியைத் தோண்டுவது போலக் கண்கவர் கலையழகு மிக்க விண்ணுயர் கோபுரங்களையுடைய கோயில்கள் இருக்கும்போதே, தமிழர்கள் தங்களுடைய இந்துமதத்தைப் பறி கொடுத்திட்டார்கள். அதாவது, தமிழர்களிடமிருந்து, தமிழர்களின் கண்போன்ற கோயில்களும், கோயில்களைச் சார்ந்த இந்துவேதமும், இந்துமதமும்; பிறமண்ணினரால் பறிக்கப்பட்டு விட்டன, பிரித்தெடுக்கப்பட்டு விட்டன என்பதுதான் மிகப்பெரிய விடிவுக்குக் கொண்டு வரமுடியாத, சிக்கலான, சிரமமான, தொல்லையான பணியாக இருக்கிறது ...” என்று தமது எல்லா நூல்களிலும் குறிப்பிடுகின்றுர். சிறப்பாக, குரு பாரம்பரியத்திலும்,

'இந்துமதம் - ஹிந்துமதம்' என்ற நூல்களிலும் குறிப்பிடுகின்றார். (இவர் 'இந்துமதம் - ஹிந்துமதம்' என்ற தலைப்பில் எழுதிய சிறிய பெரிய நூல்கள் அனைத்தும் **'குறிப்பேடுகள், இந்துமத - ஹிந்துமதக் குறிப்பேடுகள்'** என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றன.)

**4.4.5.** "இந்தப் பிறமண்ணினரான பிருமணர்கள்; பதினெண்சித்தர்களின் இந்துமதத்தின் கடவுள்களையும், தங்களுடைய வேதமதத்தின் கடவுள்களையும் பெயரளவிலும், புராண அளவிலும் இணைத்து விட்டார்கள். அதனால், மக்கள் இந்துமதத்தின் கடவுள்களோடு நேரடியாகத் தொடர்பு கொள்வதற்குத் தேவையான வரலாற்றுச் செய்திகளும், பூசைவிதிகளும், பூசைமொழிகளும், புராணச் செய்திகளும், கடவுள்கள் தொடர்பான பெயர்களும், இடங்களும் முழுமையாக இருட்டடிப்புச் செய்யப்பட்டு விட்டன, மறைக்கப்பட்டு விட்டன, திரித்துக் குழப்பப்பட்டு விட்டன.

**இக்குழப்பங்களிலெல்லாம் மேலான குழப்பம்; இமயம் முதல் குமரி வரை பதினெண்சித்தர்களின் இந்துமதப்படி நான்கு யுகங்களாகக் காலப்போக்கில் தோன்றிய சிவன்கள், சத்திகள், பெருமால்கள், மாயோன்கள், நெடியோன்கள், திருமால்கள், மாரியம்மன்கள், காளியம்மன்கள், ... முதலிய கடவுள்களுக்குத் தனித்தனிப் பெயரில் கருவறைகள் அமைக்கப்பட்டுக் கோயில்கள் கட்டப்பட்டிருந்தும்; எல்லாக் கோயில்களிலும் இருக்கக் கூடிய சிவபெருமான்களும் ஒரே சிவபெருமான்தான்; எல்லாக் கோயில்களிலும் இருக்கக் கூடிய சத்திகளும் ஒரே சத்திதான்; எல்லாக் கோயில்களிலும் இருக்கக் கூடிய பெருமால்களும் ஒரே பெருமால்தான்; எல்லாக் கோயில்களிலும் இருக்கக் கூடிய மாயோன்களும் ஒரே மாயோன்தான்; எல்லாக் கோயில்களிலும் இருக்கக் கூடிய நெடியோன்களும் ஒரே நெடியோன்தான்; எல்லாக் கோயில்களிலும் இருக்கக் கூடிய திருமால்களும் ஒரே திருமால்தான்; எல்லாக் கோயில்களிலும் இருக்கக் கூடிய மாரியம்மன்களும் ஒரே மாரியம்மன்தான்; எல்லாக்**

**கோயில்களிலும் இருக்கக் கூடிய காளியம்மன்களும் ஒரே காளியம்மன்தான்; ... என்ற ஒரு மாயாவாதத்தைத் தோற்றுவித்தார்கள்.**

இந்த மாயாவாதம்தான், பதினெண்சித்தர்கள் தங்களுடைய தாய்மொழியான அண்ட பேரண்ட அருளுலக ஆட்சிமொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் வழங்கிய இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் முழுமையாக அழித்தொழித்தது, அழித்தொழித்தது, அழித்தொழித்தது" என்று பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்கள் பிறமண்ணினரான பிருமணரின் ஹிந்துமதம் எப்படி இந்துமதத்தை அழித்தது என்ற பேருண்மையை விளக்கிக் காட்டுகிறார்.

**4.4.6.** இப்படிப் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி தமது குருபாரம்பரியத்திலும், குறிப்பேடுகளிலும் பிறமண்ணினரான பிருமணரின் ஹிந்துமதம் எப்படி எப்படி எல்லாம் பதினெண்சித்தர்களுடைய இந்துமதத்தை வகைவகையான செயல்திட்டங்களின் மூலம் அழித்தொழித்தது என்ற பேருண்மையை விளக்குகின்றார். இதுபற்றி இவர் மிகவும் வருத்தமுற்று வேதனையுடன் எழுதிய சில வாசகங்களை இந்த இடத்தில் குறிப்பிட விரும்புகிறோம் யாம்.

முதலாவதாக, "இந்தப் பிறமண்ணினரான பிருமணர்கள் சுமார் இந்துமத ஆண்டுக் கணக்கின்படி 43,71,000 ஆண்டுகள் எனும் மிகப்பெரிய கால இடைவெளியில் தோன்றிட்ட பல நூறாயிரக் கணக்கான கடவுள்களையெல்லாம் **'விழித்திருக்கும் போதே விழியைத் தோண்டி எடுத்து விடுவது'** என்ற பழமொழி போல், எல்லாக் கடவுள்களும் ஒரே கடவுள்தான் என்று கூறிவிட்டார்கள். அதாவது, குமரி முதல் இமயம் வரையுள்ள பல்லாயிரக் கணக்கான கோயில்களில் ஒவ்வொரு கோயிலுக்கும் தனித்தனிப் பெயர்கள் இருக்கின்றன; ஒவ்வொரு கோயிலுக்கும் தனித்தனிப் புராண வரலாறு, இலக்கிய வரலாறு, கோயில்களிலுள்ள மூலக் கருவறை கடவுள்கள் அனைத்துக்கும்

ஆண், பெண், அலி என்ற மூவகையினருக்கும் தனித்தனிப் பெயர்களும்; தனித்தனிப் பூசைநெறி முறைகளும், பூசைவிதிகளும், ஆகமங்களும், திருவிழாக்களும், திருநாள்களும், படையல் முறைகளும், உடை அலங்காரங்களும், நகைகளும், ஆயுதங்களும், வாகனங்களும், அருளாற்றலுடைய நீர்நிலைகளும் மிகமிகத் தெளிவாக, திட்டவட்டமாக உருவாக்கப்பட்டுள்ளன என்ற நிலையிருந்தும் **இந்தப் பிறமண்ணினரெனும் பிருமணர்கள் மிகச் சாதுர்யமாக, திறமையாக, *"ஒரே சிவனுக்குத்தான் பல கோயில்கள் கட்டப்பட்டுள்ளன"; "ஒரே மகாவிசுணுவுக்குத்தான் திருமால், பெருமால், மாயோன், நெடியோன் ... முதலிய பெயர்களில் திருப்பதிகள் கட்டப்பட்டுள்ளன"; "ஒரே காளிக்குத்தான் பல காளி கோயில்கள் கட்டப்பட்டுள்ளன"; "ஒரே மாரிக்குத்தான் பல மாரி கோயில்கள் கட்டப்பட்டுள்ளன";* ... என்று முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைத்தார்கள்.** ஏமாளியான, அப்பாவியான இந்துமத மக்கள் இவற்றையெல்லாம் நம்பி ஏற்றுக் கொண்டிட்டார்கள்.

அதனால், **நான்கு யுகமாக அந்தந்த நாட்டுக்கும், வட்டாரத்திற்கும், வட்டத்துக்கும், ஊருக்கும், கிராமத்துக்கும், தெருவுக்கும், தனிப்பட்ட குலத்தாருக்கும், தனிப்பட்ட குடும்பத்தாருக்கும், தனிமனிதருக்கும் என்று வகைவகையாக உருவாக்கப்பட்ட கடவுள்கள், தெய்வங்கள், பட்டவர்கள், ஆண்டவர்கள், இறைகள், எல்லாக்கள், தேவதைகள், தேவர்கள், அமரர்கள், இருடிகள், முனிவர்கள், இராக்கப்பன்கள், இராக்கம்மாக்கள் (அசுரர்கள், அரக்கர்கள்), தேவதூதர்கள், தேவகுமாரர்கள், திருத்தோன்றல்கள், பல்வேறு வகையான பத்தியாளர்கள், சத்தியாளர்கள், சித்தியாளர்கள், முத்தியாளர்கள், ... முதலியோர்களை அவரவர்களுக்கு உரிய முறையில், உரிய நெறியில், உரிய பூசைவிதிகளின்படி, உரிய பூசைமொழிகளை, உரிய காலங்களில் கூறி அருளாற்றல்களைப் பெறக்கூடிய செயல்நிலைகள் அனைத்தையும் இந்துக்கள் இழந்தார்கள் அல்லது இழக்கும்படிச் செய்யப்பட்டார்கள்.**

**4.4.7.** அதாவது, பதினெண்சித்தர்கள் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் வழங்கிய இந்துவேதத்தின் செயல்வடிவாகிய இந்துவேத மதமான இந்துமதத்தின் மக்களாகிய இந்துக்கள் மிகமிக எளிதாக சுலபமாக ஏமாற்றப்பட்டு விட்டார்கள் என்பதைப் பற்றி என்ன கூறுவதென்றே தெரியவில்லை. ஏனென்றால், எங்கிருந்தோ வந்த பிறமண்ணினரான பிருமணர்கள் தங்களுடைய வேதமதத்தையும், வேதமொழியான சமசுக்கிருத மொழியையும் நான்கு யுகங்களாக இருந்து வரும் இந்துமதத்துக்கும் அருளாட்சி மொழியான தமிழ்மொழிக்கும் பேரழிவைத் தரக்கூடிய வல்லமையைப் பெறுமாறு செய்து விட்டார்கள் என்பது பற்றி எண்ணிப் பார்க்கவே வியப்பாகவும், வேதனையாகவும் இருக்கிறது.

இதில் மாபெரும் வியப்பும், வேதனையும் என்னவென்றால் நான்கு யுகங்களாக அதாவது 43,71,000 ஆண்டுகளாக இருந்து வரும் மிகத் தெளிவான இந்துவேதத்தையும்; மிகச் செழிப்பான, விழிப்பான, உயிர்த் துடிப்பு மிக்க நடைமுறைகளை உடைய இந்து மதத்தையும்; இரண்டாயிரம் (2000) ஆண்டுக் கால இடைவெளிக்குள் எங்கிருந்தோ இந்த இந்துமத இந்தியாவிற்குள் வந்திட்ட பிறமண்ணினரான பிருமணர்கள்; தங்களுடைய வேதத்தின் மூலமும், வேத மதமான சனாதன தருமத்தின் மூலமும் பெருமளவு மூடிமறைத்து இருந்த இடமே தெரியாமல் செய்து விட்டார்கள்.

இதுமட்டுமல்ல, அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியாகவும்; விண் சார்ந்தனவற்றையும், மண் சார்ந்தனவற்றையும் விளக்குகின்ற அறிவியல் மொழியாகவும்; அறுபத்து நான்கு வகைப்பட்ட கலைகளையும் கற்பிக்கக் கூடிய கலைமொழியாகவும்; மனிதனைக் கடவுளாக்குகின்ற பூசைமொழி நூல்களையும், பூசைவிதி நூல்களையும், தத்துவ நூல்களையும், செயல் சித்தாந்த நூல்களையும் உடைய அருளாற்றல் மிக்க மொழியாகவும்; பல்வேறு வகையான அருள்நிலைகளைத் தரக்கூடிய

தெய்வீக ஆற்றல் மிக்க வகைவகையான எழுத்துக்களை உடைய மொழியாகவும் இருக்கின்ற தமிழ்மொழியை; எந்தவித கடவுட் தன்மையோ, அருளாற்றலோ, தெய்வீக ஆற்றலோ, அறிவியல் கலையியலோ, மனிதனைக் கடவுட் தன்மை பெறச் செய்யக்கூடிய அருளியலோ, ... இல்லாத பிரும்மண வேத மொழியான சமசுக்கிருத மொழி மிக எளிதாக வென்று, அடிமைப்படுத்திச் சிதைத்து, உருக்குலைத்து, சீரழித்து, எந்தவித அருளுலகச் செல்வாக்கோ, பொருளுலகச் செல்வாக்கோ இல்லாமல் செய்துவிட்டது!? இல்லாமல் செய்துவிட்டது!!??; இல்லாமல் செய்துவிட்டது!!!??? - என்பதை எண்ணிப் பார்க்கும் போதுதான்;

'தமிழர்களில் பெரும்பாலானவர்கள் ஏமாளிகளாகவும்!'; 'தமிழர்களில் பெரும்பாலானவர்கள் எதிரிகளை இனம் கண்டுபிடித்து, எதிர்த்துப் போராடத் தெரியாத அப்பாவிகளாகவும்!';

'தமிழர்களில் பெரும்பாலானவர்கள் தங்களுடைய தமிழ் இனத்தார்களை விட மற்ற இனத்தார்களெல்லாம் உயர்ந்தவர்கள் என்றும்; தங்களுடைய தாய்மொழியான தமிழ்மொழியை விட மற்ற எல்லா மொழிகளும் உயர்ந்தவைகள் என்றும்; தங்களுடைய தாய்மொழியான தமிழில் உள்ள இந்துவேதத்தை விட மற்ற எல்லா மொழிகளிலும் உள்ள வேதங்கள் உயர்ந்தவைகள் என்றும்; தங்களுடைய தாய்நாடான தமிழ்நாட்டில் பிறந்த தமிழில் உள்ள இந்துவேத மதமான இந்துமதத்தை விட மற்ற எல்லா நாட்டு மொழிகளுக்கும் உரிய வேதமதங்கள் அனைத்தும் உயர்ந்தவைகள் என்றும்; எண்ணித் தளர்ந்து, தாழ்வு மனப்பான்மை வளர்ந்து, பிறருக்குக் கைகட்டி அடிமையாகச் சேவகம் செய்வதே தங்களுக்குரிய வாழ்க்கை முறை அல்லது தங்களுக்குரிய தலைவிதி என்றும் எண்ணிடும் கள்ளங்கபடமில்லாத எதார்த்தவாதிகளாகவும்!';

'தமிழர்களில் பெரும்பாலானவர்கள் தங்களையும் அறியாமல் தங்களுடைய தமிழினத்தையும், தாய்மொழியான தமிழ்மொழியையும்,

தாய்மொழியான தமிழில் உள்ள இந்துவேதத்தையும், தாய்நாட்டு மதமான தமிழ்மொழியில் உள்ள இந்துவேத மதமான இந்துமதத்தையும் அன்னியர்களிடம் கைக்கூலி பெற்றுக் கொண்டு கண்மூடித்தனமாக தாக்கித் தகர்த்துச் சிதைத்துச் சீரழித்துச் செயல்படக் கூடிய அறியாமை நிறைந்தவர்களாகவும்!';

'தமிழர்களில் கணிசமானவர்கள் தங்களுடைய பேராசைகளாலும், தனிமனித அகம்பாவ ஆணவ வம்பு வீம்புப் போக்குகளாலும், தங்களையறியாமல் தாய்மொழியான தமிழ்மொழிக்கும், தாய்மொழியான தமிழ்மொழியில் உள்ள இந்துவேதத்திற்கும், தமிழ்நாட்டில் பிறந்த தமிழ்மொழியில் உள்ள இந்துவேத மதமான இந்துமதத்திற்கும், தங்களுடைய இனத்தவர்களான தமிழினத்தவர்களுக்கும் துரோகிகளாகவும், விரோதிகளாகவும் செயல்பட்டுவிடும் குறுகிய போக்குடைய வெறியர்களாகவுமே!' ...

இருக்கிறார்கள்! இருக்கிறார்கள்! இருக்கிறார்கள்! என்ற பேருண்மைகள் விளங்குகின்றன.

அதனால்தான், பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் தோன்றியுள்ள யாம், தமிழர்களைத் திருத்துவது என்பது எளிதல்ல! எளிதல்ல!! எளிதல்ல!!! என்பதைப் புரிந்து; அதற்கேற்ப தமிழர்களைத் திருத்தக் கூடிய ஆற்றலுள்ள தமிழ்மொழியில் உள்ள இந்துவேதத்தையும், தமிழ்மொழியிலுள்ள இந்துவேத மதமான இந்துமதத்தையும் மறுமலர்ச்சி அடையச் செய்வதற்காக; வளவளர்ச்சி பெறச் செய்வதற்காக; வலிமைச் செழிச்சி பெறச் செய்வதற்காக; ஆட்சிமீட்சி பெறச் செய்வதற்காக ... 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' என்ற ஓர் ஒப்புயர்வற்ற அமைப்பையும், அதன்கீழ் 48 வகையான நிறுவன நிர்வாகங்களையும் உண்டாக்கியுள்ளோம்.

இவற்றிற்குரிய செயல்திட்டங்களையும், செயல்நிலைகளையும் மிகமிகத் தெளிவான கொள்கைகளோடும், குறிக்கோள்களோடும், தேவையான

கருத்து விளக்கங்களோடும் எண்ணற்ற தனிநூல்களாக 'இந்துமதக் குறிப்பேடுகள்' என்ற தலைப்பில் எழுதி வழங்கியுள்ளோம்.

இவற்றையெல்லாம், எதையும் எவரையும் நம்பும் எதார்த்தவாதிகளான தமிழர்கள்; எதிரிகள் கைப்பற்றிக் கொள்ளும் அளவுக்கு விட்டுவிடக் கூடாது என்பதற்காகவே தேர்ந்தெடுக்கப்பட்ட பரம்பரையினரிடமும், தேர்ந்தெடுக்கப்பட்ட நிலவறைகளிடத்தும் ஒப்படைத்துச் செல்கிறோம், ஒப்படைத்துச் செல்கிறோம், ஒப்படைத்துச் செல்கிறோம். இம்மட்டின்றி, பட்ட மரம் போல் உள்ள பைந்தமிழர்களைப் புத்துயிர் பெற்றுத் தழைத்துக் கிளைத்துச் செழித்து வளரச் செய்யும் தேவர் அமுதம் போன்ற இந்துமதக் குறிப்பேடு நூல்களின் சாரங்களை, உயிர்நாடியான அடிப்படைக் கொள்கைகளைப் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் மட்டுமே படிக்கக் கூடிய குரு பாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம், அரச பாரம்பரியம் எனும் மூன்று நூல்களிலும் மிகமிக விரிவாகவும், விளக்கமாகவும் எழுதிச் செல்கிறோம், எழுதிச் செல்கிறோம், எழுதிச் செல்கிறோம்.

இவற்றால் அருளுலகின் மூலவர்களாகவும், காவலர்களாகவும், நாயகர்களாகவும், வாரிசுகளாகவும், சத்தான வித்துக்களாகவும், சொத்துக்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ள தமிழர்கள் என்றாவது ஒருநாள் உய்வு பெறுவார்கள்! உய்வு பெறுவார்கள்!! உய்வு பெறுவார்கள்!!! என்று நம்புகிறோம், வாழ்த்துகிறோம்." என்று இந்துமதத்தின் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, இந்துமதத் தந்தை, இந்துவேத நாயகம், ஞானாச்சாரியார், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் எழுதுகிறார் என்பதை இன்று வாழும் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகிய குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார், இந்துமதத் தந்தை, இந்துவேத நாயகம், ஞானாச்சாரியாராகிய யாம் குறிப்பிட்டுக் கொள்கிறோம்.

இதனை நமது இ.ம.இ.யைச் சேர்ந்தவர்களாவது பொறுப்போடும், பொறுமையோடும் பலமுறை திருப்பித் திருப்பிப் படித்துப் புரிந்து செயல்பட முன்வர வேண்டும்! புரிந்து செயல்பட முன்வர வேண்டும்!! புரிந்து செயல்பட முன்வர வேண்டும்!!! என்று கேட்டுக் கொள்கிறோம்.

**4.4.8.** நான்வேதம் என்பதிலுள்ள இருடிவேதம், அசுரவேதம், யாமவேதம், அதர்வானவேதம் என்கின்ற நான்கும் பொதுமக்கள் தங்களுடைய அச்சங்களை அகற்றிக் கொள்ளவும், கூச்சங்களை நீக்கிக் கொள்ளவும், இச்சைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், மாச்சரியங்களைப் போக்கிக் கொள்ளவும் ஆகிய நான்கு வகைகளில் உதவுகின்றன. இப்படி இந்நான்கு வேதங்களும் பொதுமக்களுக்கு உதவுவதற்காகத்தான் ஒவ்வொரு வேதமும் [1]'தனிப்பட்ட ஓதுமுறைகளையும்', [2]'தனிப்பட்ட பூசைமொழிகளையும்', [3]'தனிப்பட்ட பூசைவிதிகளையும்', [4]'தனிப்பட்ட தத்துவ விளக்கங்களையும்', [5]'தனிப்பட்ட செயல்சித்தாந்த நடைமுறைகளையும்', [6]'தனிப்பட்ட நெருப்புக் குண்டங்களையும்', [7]'தனிப்பட்ட அதிபதிகளையும் அதாவது கடவுள்களையும்'... பெற்றிருக்கின்றன, பெற்றிருக்கின்றன, பெற்றிருக்கின்றன.

இந்த ஏழு வகையான கருத்துக்கள்தான் தமிழர்களுடைய தாய்மொழியான தமிழில் உள்ள இந்துவேத மதமான இந்துமதம் வேறு; பிறமண்ணினரான பிருமணர்கள் தங்களுடைய தாய்மொழியான சமசுக்கிருத மொழியிலுள்ள வேதமதமான சனாதன தருமத்தையும், பதினெண்சித்தர்களுடைய தமிழிலுள்ள இந்து வேத மதமான இந்துமதத்தின் சில பகுதிகளையும் சேர்த்துப் புதிதாக உருவாக்கிய ஹிந்துமதம் வேறு என்ற பேருண்மைகளை விளக்குகின்றன, விளக்குகின்றன, விளக்குகின்றன. அதற்கு தமிழிலுள்ள நான்கு வேதங்களும் எந்த அளவு உதவுகின்றன என்பதற்கு ஒருசில எடுத்துக் காட்டுக்களைக் கீழே தருகின்றோம்.

1. தமிழிலுள்ள இந்துவேதத்தின்படி, கடவுள்கள் நாற்பத்தெட்டு வகைப்படுவார்கள்.
2. தமிழிலுள்ள இந்து வேதத்தின்படி, கடவுள்களில் தாங்களாகவே தோன்றக் கூடிய **'தான் தோன்றிக் கடவுள்கள்'** என்றும், அருளாளர்களால் தோற்றுவிக்கப்படக் கூடிய **'தோன்றிக் கடவுள்கள்'** என்றும் இருபெரும் வகை உண்டு. இவற்றிலேயே, விண்ணுலக இன்பங்களைத் தரக்கூடிய கடவுள்கள் என்றும், மண்ணுலக இன்பங்களைத் தரக்கூடிய கடவுள்கள் என்றும் இருபெரும் வகையினர் உண்டு.
3. தமிழிலுள்ள இந்துவேதத்தின்படி கடவுள்கள் மனிதர்களாகப் பிறப்பதுண்டு என்பதும்; மனிதர்கள் கடவுள்களாக மாறுகின்றனர் அல்லது மாறலாம் என்பதும் இருவகைப்பட்ட அரிய பெரிய கொள்கைகளாகும்.
4. தமிழிலுள்ள இந்து வேதத்தின்படி கடவுள்களுக்கு பிறப்புண்டு, இறப்புண்டு, பிறப்பிறப்பற்ற பெருநிலை உண்டு.
5. தமிழிலுள்ள இந்துவேதத்தின்படி கடவுள்களில் ஆண் கடவுள்கள், பெண் கடவுள்கள், இரண்டு நிலைகளும் கடந்த அலிநிலைக் கடவுள்கள் என்று மூன்று வகையினர் உண்டு. இவர்களே 1008 சீவாலயத்தவர்கள், 243 சத்தி பீடத்தவர்கள், 108 திருப்பதியினர்கள் என்று குறிக்கப்படுகிறார்கள்.
6. தமிழிலுள்ள இந்து வேதத்தின்படி, கடவுள்களில் அருவ நிலையினர், அருவுருவ நிலையினர், உருவ அருவ நிலையினர், உருவ நிலையினர் என்று நான்கு வகையான உருவ வடிவமைப்பினை அல்லது வடிவத் தன்மையினை உடையவர்கள் இருக்கின்றார்கள்.
7. தமிழிலுள்ள இந்து வேதத்தின்படி, கடவுள்களில் அவர்கள் தோன்றுகின்ற அல்லது தோற்றுவிக்கப்படுகின்ற நிலைகளுக்கேற்பத் திருநிலையினர், தருநிலையினர், கருநிலையினர், குருநிலையினர் என்று நான்கு வகையினர் உண்டு.

8. தமிழிலுள்ள இந்து வேதத்தின்படி கடவுள்கள் தாங்கள் வாழுகின்ற இடங்களுக்கேற்ப கருவறையினர், வெட்டவெளிக் கருவறையினர், வழிபாட்டு நிலையக் கருவறையினர், கோயில் மூலக் கருவறையினர் என்று நான்கு வகைப்படுவர்.
9. தமிழிலுள்ள இந்துவேதத்தின்படி, கடவுள்களுக்குச் செய்யப்படுகின்ற பூசைமுறைகளில் நான்கு வேதங்களும் பயன்படுத்தப் பட்டாலும், ஒவ்வொரு வேதத்தைப் பயன்படுத்தும்போதும் திருமுறைப் பூசைவழி, தருமுறைப் பூசைவழி, கருமுறைப் பூசைவழி, குருமுறைப் பூசைவழி என்று நான்கு வகைப் பூசைமுறை வழிகள் கையாளப்பட வேண்டும் அல்லது கையாளப் படுவதுதான் மரபு.
10. தமிழிலுள்ள இந்து வேதத்தின்படி, பூசை நெருப்புக் குண்டங்களில் (i) வட்டம், (ii) முக்கோணம், (iii) சதுரம், (iv) ஐங்கோணம், (v) அறுகோணம், (vi) கண் வடிவம், (vii) எந்தவித வடிவமுமின்றி சம தரையைப் பயன்படுத்தல் என்று ஏழு வகைக் குண்டங்களைப் பயன்படுத்தும் முறை இருக்கிறது. இந்த குண்டங்கள் ஒவ்வொன்றும் எந்தெந்தக் காலங்களில், எந்தெந்த கடவுள்களுக்கு, எந்தெந்த முறையில் பயன்படுத்த வேண்டும் என்ற பேருண்மைகள் தமிழ்மொழியிலுள்ள இந்துவேதத்தில்தான் இருக்கின்றன, இருக்கின்றன, இருக்கின்றன.

இவற்றால் பதினெண்சித்தர்கள் தமிழில் வழங்கியுள்ள இந்துவேதமும், இந்துவேத மதமான இந்துமதமும் வேறு என்பதும்; பிறமண்ணினரான பிரமணர்களுடைய சமசுக்கிருத மொழியில் இருக்கின்ற வேதமும், அந்த வேதத்தின் மதமான சனாதன தருமத்தின் மூலம் உண்டாக்கப்பட்ட ஹிந்து மதமும் வேறு என்ற பேருண்மைகளும் தெளிவாக்கப்பட்டு விட்டன.

**4.4.9.** “பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகிய யாம்; தமிழரின் இந்து மதத்துக்கும், பிரமணர்களின் ஹிந்து மதத்துக்கும்

இடையேயுள்ள வேறுபாடுகளை நான்மறை, நான்முறை, நானெறி, நான்வேதம், ... முதலியவற்றின் மூலம் மிகமிகத் தெளிவாகவும், விளக்கமாகவும், தக்க சான்றுகளோடும், ஊன்றுகளோடும் நிறுவியுள்ளோம். இருந்தபோதிலும் நமது தமிழ் மக்கள் பிருமணர்களுடைய ஹிந்துமத மாயையில் இருக்கிறார்கள் என்பதால், **தமிழர்களுடைய இந்துமதமும் பிருமணர்களுடைய ஹிந்துமதமும்** என்ற தலைப்பில் இரண்டிற்குமுள்ள வேறுபாடுகளைப் பற்றிய விவரங்களை வரிசைப்படுத்தி, பட்டியலிட்டு, அட்டவணை போட்டு குறிப்பேடு ஒன்றைத் தயாரித்துள்ளோம். இந்தக் குறிப்பேடாவது நமது தமிழர்களின் கண்களைத் திறக்கட்டும்.

அதாவது தென்குமரி முனை முதல் வட இமயமலை வரை உள்ள இந்த மிகப் பெரிய நிலப்பரப்பில் வாழும் இந்தத் தமிழர்கள் அந்நிய மொழிகளின் கூட்டுறவால் பல்வேறு வகையான புதிய புதிய மொழிகளைத் தோற்றுவித்துக் கொண்டும்; அன்னிய மதங்களின் ஆட்சியாலும், சூழ்ச்சியாலும் கணக்கற்ற சாதிப் பாகுபாடுகளையும், மத வேறுபாடுகளையும் உண்டாக்கிக் கொண்டும், தாங்கள் அனைவரும் தமிழினத்தவர்கள் என்பதை மறந்தும், துறந்தும், மறுத்தும், வெறுத்தும், எதிர்த்தும், பகைத்தும் சின்னாபின்னமாகச் சிதறிக் கிடக்கிறார்கள்.

இவர்கள் அனைவரும் மீண்டும் ஒற்றுமைப்பட்டு ஒருமைப்பாடு பெற வேண்டுமென்றால் இவர்கள் அனைவரும் **தங்களுடைய மதம்; 'பதினெண்சித்தர்களால் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் வழங்கப்பட்ட இந்து வேத மதமான இந்துமதம் தான்' என்ற பேருண்மையை முறையாகவும், நிறைவாகவும், முழுமையாகவும் உணர்ந்து ஒப்புக்கொண்டு செயல்படக் கூடிய நல்ல நிலை உருவாக வேண்டும்! உருவாக வேண்டும்!! உருவாக வேண்டும்!!!** உருவாக்கப்பட வேண்டும்! உருவாக்கப்பட வேண்டும்!! உருவாக்கப்பட வேண்டும்!!!

ஏனென்றால், குமரிமுனை முதல் வட இமயம் வரை வாழுகின்ற தமிழர்கள் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்குள் பல்வேறு மொழிகளையும், சாதிகளையும், இனங்களையும் எப்படியெப்படியெல்லாமோ ஏற்றுப் பெற்று தாங்கள் அனைவரும் ஒரே தமிழினத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை என்றென்றைக்குமே மீண்டும் எண்ணிப் பார்க்க முடியாதவர்களாகி விட்டார்கள்! என்றென்றைக்குமே மீண்டும் எண்ணிப் பார்க்க முடியாதவர்களாகி விட்டார்கள்!! என்றென்றைக்குமே மீண்டும் எண்ணிப் பார்க்க முடியாதவர்களாகி விட்டார்கள்!!!

**அதனால், இவர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி ஒற்றுமைப் படுத்தி, ஒருமைப்படுத்துவதற்குத் 'தமிழினம்' என்ற பெயரையோ, 'தமிழ்மொழி' என்ற பெயரையோ, 'தமிழ்நாடு' என்ற பெயரையோ, ... பயன்படுத்திட முடியாது, முடியாது, முடியாது, முடியவே முடியாது. இதே நிலைதான், தென்குமரி முதல் வடவேங்கடம் வரை உள்ள தமிழ் கூறும் நல்லுலகத்தின் தமிழர்களுக்கும் இருக்கின்றது.** அதாவது, தமிழ்நாட்டில் பிறந்து, தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு; தமிழர்களாகவே வாழ்ந்து வருகின்ற தமிழர்களுக்கிடையிலேயே தமிழ்மொழிப் பற்றோ, தமிழ்மொழி உரிமையுணர்வோ, தமிழ்மொழிப் பெருமித உணர்வோ, தமிழ்மொழியின் கடவுட்தன்மை பற்றிய நம்பிக்கையோ, தமிழ் இன உணர்வோ, தமிழின உரிமை உணர்வோ, தமிழினப் பெருமித உணர்வோ, தமிழினப் பாச உணர்வோ, தமிழின ஒற்றுமையுணர்வோ, தமிழின ஒருமைப்பாட்டுணர்வோ, ... இல்லை, இல்லை, இல்லை, இல்லவே இல்லை.

எனவே, தமிழ் நாட்டுக்குள் உள்ள தமிழர்கள் தங்களுடைய இன உரிமை உணர்வையும், மொழி உரிமை உணர்வையும் மறந்தும், துறந்தும், மறுத்தும், வெறுத்தும், ஒதுக்கியும், பதுக்கியும், குறைத்தும், மறைத்தும், எதிர்த்தும், பகைத்தும், அன்னியர்களிடம் மண்டியிட்டுக் கூனிக் குறுகிக் கும்பிட்டு அவர்களுடைய காவலாளிகளாகவும்,

கைக்கூலிகளாகவும், எடுபிடிகளாகவும், கங்காணிகளாகவும், அடிமைச் சேவகர்களாகவும் வாழுகின்ற இன்றைய நிலையில்; இவர்களிடம் 'தமிழினம்' என்ற பெயரையோ, 'தமிழ்மொழி' என்ற பெயரையோ, 'தமிழ்நாடு' என்ற பெயரையோ பயன்படுத்தித் தமிழர்களுக்குத் தன்னம்பிக்கை உணர்வையோ, தன்மான உணர்வையோ, மொழியுரிமை உணர்வையோ, இன உரிமை உணர்வையோ உண்டாக்கித் தமிழர்களை மீண்டும் ஒற்றுமைப்படுத்தி ஒருமைப்படுத்திடல் வேண்டுமென்பது இயலாத ஒன்று, இயலாத ஒன்று, இயலாத ஒன்று, இயலவே இயலாத ஒன்றேயாகும்.

எனவேதான், **குமரி முதல் இமயம் வரை உள்ள தமிழர்களையெல்லாம் ஒன்று திரட்டி, ஒற்றுமைப் படுத்தி, ஒருமைப் படுத்திட வேண்டுமென்றாலும் சரி!; குமரி முதல் வடவேங்கடம் வரையுள்ள தமிழ் கூறும் நல்லுலகத்திற்குரிய தமிழர்களை மீண்டும் ஒன்று திரட்டி, ஒற்றுமைப் படுத்தி, ஒருமைப் படுத்திட வேண்டுமென்றாலும் சரி; அதற்குத் தமிழ்மொழியில் உள்ள தமிழர்களுடைய 'இந்துவேதம்' என்ற சொல்லையும், இந்துவேத மதமான 'இந்துமதம்' என்ற சொல்லையும் மட்டும்தான் பயன்படுத்திட வேண்டும்! பயன்படுத்திட வேண்டும்!! பயன்படுத்திட வேண்டும்!!!** பயன்படுத்திட முடியும்! பயன்படுத்திட முடியும்!! பயன்படுத்திட முடியும்!!! என்ற பேருண்மையை முறையாகவும், முழுமையாகவும், நிறைவாகவும் உணர்ந்துள்ளோம் யாம்.

எனவேதான், தமிழர்கள் தங்களுக்காகப் பதினெண்சித்தர்கள் தமிழ்மொழியில் வழங்கியுள்ள இந்துமதம் வேறு, பிருமணர்களுடைய சமசுக்கிருத மொழியிலுள்ள ஹிந்துமதம் வேறு என்ற பேருண்மையைக் கட்டாயமாகப் புரிந்து கொள்ள வேண்டும். ... ... ...

***[இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்...]***

# <u>தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் கருவூறூர்</u>

சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறூர் ஏறத்தாழ (256) இருநூற்று ஐம்பத்தாறு ஆண்டுகள் வாழ்ந்திட்டார். இவர் ஒன்பது பிற்காலச் சோழர்குல மன்னர்களுக்குக் குல குருவாகவும்; அரசரில்லாக் காலங்களில் அரியாசனத்தில் அமர்ந்து அரசோச்சும் ஆட்சித் தலைவராகவும் வாழ்ந்திட்டார். தஞ்சைப் பெரிய கோயிலிலும், நாட்டின் பல பகுதிகளிலும் 'சிறு பள்ளி', 'பெரும் பள்ளி' என்ற கல்விக்கூடங்களை நடத்திப் பல கலைகளையும் முறையாக வளர்த்திட்டார். இவருக்கும் முதலாம் இராசராசனுக்கும் தமிழர் - தமிழர் எதிரி உறவுமுறை பற்றிக் கருத்து மாறுபாடு முற்றியதால் கி.பி.1040இல் **<u>பங்குனி மாதம் முழுநிலவு நாளன்று</u>** தஞ்சைப் பெரிய கோயிலில் தான் அமைத்த நிலவறைக்குள் சென்று மறைந்திட்டார். அப்போது தாய்லாந்து நாட்டு இளவரசியும், பல்லவ குலத்து இளவரசிகள் இருவரும் [*இவர்களிருவரும் இவரால் திருமணம் செய்யப்பட்டுக் கருவுறாமல் மீண்டும் கன்னியாக்கப் பட்டவர்கள். இவருக்கு தொண்டூழியம் செய்து கொண்டு 'கருப்பழகி' என்னும் காளிகோயிலிலும், பெரிய உடையார் கோயில் சுற்றுப்பாதையில் உள்ள 'வராகி' கோயிலிலும் பூசை செய்து வந்தார்கள்.*] நிலவறைக்குள் சென்றிட்டனர்.

**//குருதேவர் எழுதிய 'தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் கருவூறூர் கதை' என்ற நூலிலிருந்து சில வரிகள்.//**



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி






12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்** அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிப் போய்க் கொண்டிருக்கும் கோப்புக்களிலிருந்து வழங்கப்படுகின்றன.

"… இந்துமதத்தின் மக்களாகிய இந்துக்கள் தங்களுடைய எல்லாவகைப்பட்ட நலிவு, மெலிவு, தேக்கம், முடக்கம், ஒடுக்கம், தேய்வு, தொய்வு, … முதலிய நிலைகளிலிருந்து விடுதலை பெறுவதற்காக இந்துமத மூலவர்களாகவும், காவலர்களாகவும், நாயகர்களாகவும், வாரிசுகளாகவும் இருக்கின்ற தமிழர்கள் என்னென்ன செய்ய வேண்டும்?; எதையெதை எப்படிச் செய்ய வேண்டும்? என்று விளக்கிடும் இந்த அஞ்சல் வடிவக் கட்டுரை நூலுக்கு 'தமிழர்கள் மறுசிந்தனை' என்ற தலைப்பு வழங்கப்பட்டிருக்கிறது…."

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ10/-